பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 141-ஆக அதிகரித்துள்ள நிலையில். மீட்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2. இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கான தேசிய அளவிலான பயிற்சி திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.
3. 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாவதில் பிரதமரின் கதிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.
4. வியட்நாம் பிரதமர் திரு **Pham minh chinh** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் இரட்டையர் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் ஷிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாட்டில் நேற்று நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 141-ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக வடநாடு அருகே உள்ள மூன்று கிராமங்கள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தேசிய பேரிடர் மீட்புப்படையினருடன், மாநில மீட்புப் படையினரும், விமானப்படையின் ஹெலிகாப்டர்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

நிலச்சரிவில் சிக்கியிருப்பவர்களை கண்டறிவதற்காக மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே வயநாடு அருகே உள்ள சூரல்மலா என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் அறிவுறுத்தியுள்ளார்.

அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் குறித்து திருவனந்தபுரத்தில் அவர் உயர்நிலைக் குழுவினருடன் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் நேற்று இதனை தெரிவித்த உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்தராய், இந்த சம்பவத்தில் ஏராளமானோர் உயிரிழந்திருப்பதாகவும், 250-க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி கண்காணித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு உதவுவதற்காக விமானப்படை ஹெலிகாப்டர்கள் மற்றும் மோப்ப நாய்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாவதில் பிரதமரின் கதிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய பயணம் என்ற பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்கில் பேசிய அவர், 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இந்தியா எளிதில் எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக மக்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

நான்கு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் துறைகளில் மிகப்பெரும் வளர்ச்சியை எட்டுவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு பியூஷ்கோயல் கூறினார்.

**[]<<<>>>[]**

இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்றவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தி எதிர்காலத்திற்கு தயார் படுத்தவும் மத்திய அரசு தேசிய அளவிலான பயிற்சி திட்டத்தை தொடங்கி இருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தேசிய பயிற்சி திட்டத்திற்கான இணையதளத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், நாடு முழுவதும் இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக 100 கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி, ஆட்டோமொபைல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இளைஞர்களுக்கு ஊக்கத்தொகையுடன்கூடிய பயிற்சி அளிக்கப்படுவதாக அவர் கூறினார்.

இதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இளைஞர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற வேலையை தேர்வு செய்வதற்கு இந்த திட்டம் வழிவகுக்கும் என்றும், பட்ஜெட்டில் இதற்காக கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

**[]<<<>>>[]**

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் கடந்த மார்ச் மாதம் வரை ஒரு கோடியே 23 லட்சம் கோடி நிதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், இதன்மூலம் 14 துறைகளில் எட்டு லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

நாட்டின் உற்பத்தித்திறன் மற்றும் ஏற்றுமதி துறையை ஊக்குவிக்க உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளிலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதாகவும் திரு ஜிதின் பிரசாதா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் இரண்டு நாட்கள் நடைபெறும் ஆளுநர்கள் மாநாடு நாளை மறுநாள் புதுதில்லியில் தொடங்குகிறது.

குடியரசுத் தலைவராக திருமதி திரௌபதி முர்மு பொறுப்பேற்ற பின்னர் முதலாவது ஆளுநர்கள் மாநாடு இதுவாகும்.

அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், உயர்கல்வியில் சீர்திருத்தம், பல்கலைக்கழகங்களுக்கான அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று காலை தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் திருச்சி முக்கொம்பு அணையை வந்தடைந்தது.

இதையடுத்து இன்று காலை ஒன்பது மணி அளவில் கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதனிடையே மேட்டூர் அணை நிரம்பியதை அடுத்து அணையின் பாதுகாப்பு கருதி அணையின் 16 கண் மதகுகள் வழியாக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

நேற்று மாலை முதல் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு அணையிலிருந்து தற்போது வினாடிக்கு 68 ஆயிரம் கன அடி தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக காவிரி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இந்நிலையில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் கன மழை பெய்து வருவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று காலை நிலவரப்படி 98 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் அந்நாட்டு அதிபர் திரு மசூர் **Pezeshkian** பதவியேற்பு விழாவில் இந்தியாவின் சார்பில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கலந்து கொண்டார்.

புதிய அதிபராக பொறுப்பேற்ற அவருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடியின் வாழ்த்துக்களையும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

இது குறித்து வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானின் ஜபாகர் துறைமுகம், இந்தியா – ஈரான் இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்த உதவும் என்று தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கும், மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையேயான சரக்கு போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு இந்த துறைமுகம் வழிவகுக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வியட்நாம் பிரதமர் திரு **Pham minh chinh** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.

அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள், வர்த்தகக் குழுவினர் உள்ளிட்டோரும் இந்தியா வந்துள்ளனர்.

புதுதில்லி விமான நிலையத்தில் அவருக்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திருமதி பபித்ரா **Margherita** தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விட்நாம் பிரதமர் தமது பயணத்தின்போது பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆகியோரையும் வியட்நாம் பிரதமர் சந்திக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்தின் தெற்கு காஸா பகுதியில் கடந்த ஒருவார காலமாக நடத்தப்பட்ட தாக்குதல் நிறுத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ள நிலையில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

கான்யூனிஸ் நகருக்குள் இஸ்ரேல் படையினர் மீண்டும் நுழைந்திருப்பதாகவும், அங்கு ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதை கருத்தில் கொண்டும் படைகள் குவிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இஸ்ரேல் படையினரின் தாக்குதலால் லட்சக்கணக்கான மக்கள் அந்த பகுதியிலிருந்து வெளியேறிய நிலையில், தற்போது வீடு திரும்ப தொடங்கி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

லெபனான் தலைநகர் **Beirut**-ல் இஸ்ரேல் படையினர் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலின் போலான் பகுதியில் அண்மையில் நடத்தப்பட் ராக்கெட் தாக்குதலுக்கு காரணமான ஹெஸ்புல்லா அமைப்பின் கமாண்டரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதில் ஒருவர் உயிரிழந்ததாகவும், 35-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் லெபனான் அமைச்சர் திரு **Firas abiad** தெரிவித்துள்ளார்.

என்றாலும் இந்த தாக்குதலை இஸ்ரேல் மறுத்துள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் இரட்டையர் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் ஷிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை இந்தோனேஷிய இணையை 21-13, 21-13 என்ற நேர் செட்களில் வீழ்த்தியது.

மகளிர் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் பஜன்கௌர் காலிதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அவர் போலந்து வீராங்கனையை ஆறு – பூஜ்ஜியம் என்ற புள்ளி கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா சூப்பர் ஓவரில் வெற்றிபெற்றது.

***End of News***